# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2056, - நவம்பர் 8, 2025 Weekly E-paper ● November 8, 2025




# சாதி வெறியும் நிறவெறிதான்!

சுப.வீரபாண்டியன்

## வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தம் வலிமையாகிறது எதிர்ப்பு !

## நடுவிகந்தான் ஆக்கம்...

தலையங்கம்

## ஆஸ்திரேலிய மனிதநேயர் மாநாட்டில் தலைவர் சுப.வீரபாண்டியன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2056, - நவம்பர் 8, 2025 Weekly E-paper ● November 8, 2025


# சாதி வெறியும் நிறவெறிதான்!

சுப.வீரபாண்டியன்

நான்காவது அனைத்துலக மனித நேய மாநாடு, ஆஸ்திரேலிய நாட்டின் மெல்பேர்ன் மாநகரில், எதிர்பார்த்ததை விட மிகச் சிறப்பாக நடந்து முடிந்திருக்கிறது!

அமெரிக்கா, ஐரோப்பா, இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, ஜப்பான் என்று பல்வேறு நாடுகளில் இருந்து வந்திருந்த, பல்வேறு துறைகளைச் சார்ந்த வல்லுனர்கள் மாநாட்டில் கலந்து கொண்டனர்! காலை முதல் இரவு வரை, இரண்டு நாள்களும் தொடர்ந்து மாநாட்டின் நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டே இருந்தன. இடையில் லிடியன் நாதஸ்வரம், அமிர்தவர்ஷினி ஆகியோரின் இசை நிகழ்ச்சி , குறிப்பாக குறளிசைக் காவியம் மிகச் சிறப்பான வரவேற்பைப் பெற்றது ! அரங்கமே எழுந்து நின்று கையொலி எழுப்பி அவர்களைப் பாராட்டியது ! ஆஸ்திரேலிய நாட்டின் செனடர்கள், மாநகர மேயர் என்று பலரும் வந்திருந்தனர்!

தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர், துணை முதலமைச்சர், திராவிடர் கழகத்தின் தலைவர் ஆசிரியர் ஆகியோர் வாழ்த்திடும் காணொளிகளோடு தொடங்கி, இந்திய ஒன்றிய அரசின் மேனாள் அமைச்சர் ஆ. இராசா அவர்களின் நிறைவுரையோடு மாநாடு முடிவடைந்தது !

ஆஸ்திரேலியாவிலும் தலைகாட்டிய சாதி உணர்வைக் கண்டித்து, அதுவும் ஒருவிதமான இனவெறிதான் என்று கூறி, சாதி உணர்வைப் பரப்பினால் தண்டிக்க வேண்டும் என்ற கருத்தையும் ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் முன்மொழிந்த செனடர் லீ மேடையில் பாராட்டப்பட்டார்.

நான்காவது அனைத்துலக மனித நேய மாநாடு, ஆஸ்திரேலிய நாட்டின் மெல்பேர்ன் மாநகரில், எதிர்பார்த்ததை விட மிகச் சிறப்பாக நடந்து முடிந்திருக்கிறது.



ஆஸ்திரேலியாவில் உள்ள பெரியார் - அம்பேத்கர் சிந்தனையாளர் வட்டம் (PATCA) நடத்திய இம்மாநாட்டில், தொடக்கம் முதல் இறுதி வரையில்,

அவ்விரு சிந்தனையாளர்களின் குரல்களும் கேட்டுக் கொண்டே இருந்தன!

வந்திருந்தோர், கேட்டறிந்தோர் அனைவரும் பாராட்டிய அம்மாநாட்டை, அமெரிக்காவைச் சேர்ந்த மருத்துவர் சோம. இளங்கோவன், முனைவர் அண்ணாமலை மகிழன் , தோழர் மூர்த்தி, தோழர் சுமதி உள்ளிட்ட பலரும் முன் நின்று நடத்தினார்கள்.





அனைவரின் பாராட்டுதல்களையும் பெற்ற அம் மாநாட்டின் சிறப்பைக் கண்டு, பாவம், தினமலர்தான் கொஞ்சம் நொந்து போய்விட்டது! அவர்களின் வலையொளியில், இந்த மாநாடு பற்றிக் கேள்விப்பட்ட ஆஸ்திரேலியத் தமிழர்கள் அனைவரும் பதற்றத்தோடும், ஆக்ரோஷத்தோடும் இருப்பதாக வாசு ஸ்ரீனிவாசன் என்னும் ஒருவரைப் பேச வைத்திருந்தது ! அதுவே அம் மாநாட்டின் வெற்றிக்கு போதுமான சான்றாகவும் இருந்தது ! ●



# வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தம் வலிமையாகிறது எதிர்ப்பு !

**கழகத் தலைவர் ஸ்டாலின் எஃஸ் தளப் பதிவு:** தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையைப் பறித்து, ஜனநாயகத்தைப் படுகொலை செய்யும் நோக்கோடு அவசரகதியில் மேற்கொள்ளப்படும் SIR-க்கு எதிராக ஒன்றிணைந்து குரல் கொடுப்பது அனைத்துக் கட்சிகளின் கடமை! வாக்காளர் பட்டியல் திருத்தத்தைக் குழப்பங்கள், ஐயங்கள் இல்லாமல் போதிய கால அவகாசத்துடன், 2026 பொதுத் தேர்தலுக்குப் பின்பு நடத்த வேண்டும் என்ற நமது கோரிக்கையை ECI ஏற்காததால், உச்சநீதி மன்றத்தை நாட இன்றைய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளோம். *(3.11.2025 அன்று உச்ச நீதிமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி தமிழ்நாட்டில் எஸ்.ஐ.ஆர்-ஐ நடைமுறைப்படுத்துவதை எதிர்த்து வழக்குத் தொடர்ந்துள்ளார். மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ, எம்.பி. இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்)*



**விளக்க மறுக்கும் ஆணையம்:**

பீகார் மாநிலத்தை எடுத்துக்காட்டாகக் கொண்டால், தேர்தல் ஆணையம் சான்றுகளைக் கேட்கும்போது பலரால் ஆணையம் குறிப்பிடும் 11 சான்றுகளில் ஒன்றைக்கூட பலரால் காட்ட முடியாமல் போகிறது. இதனால் ஆதார், குடும்ப அட்டை போன்ற ஆவணங்களை ஏற்க வேண்டுமென அரசியல் கட்சிகள் வற்புறுத்துகின்றன.

அடுத்ததாக, பீகார் மாநிலத்தைச் சேர்ந்த பலர் வேலை தேடி வெளி மாநிலங்களுக்குச் சென்றிருப்பதால் அவர்களது பெயர்கள் சொந்த மாநிலத்தில் நீக்கப்படக்கூடாது என்பதுடன், தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் வேலை தேடி வந்துள்ள வெளி மாநிலத்தவரின் எண்ணிக்கை அதிகம் என்பதால், அவர்கள் தமிழ்நாட்டின் வாக்காளர் பட்டியலில் இடம்பெறக் கூடாது. அப்படி நடந்தால் தேர்தல் முடிவுகள் தமிழர்களுக்கு எதிரான பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். இப்படிப் பல குளறுபடிகள். இதுகுறித்து தேர்தல் ஆணையம் எந்த சரியான விளக்கமும் தரவில்லை, இதுவரை.

**முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம்** ஆணையத்தின் நடவடிக்கையை “அதிகார துஷ்பிரயோகம்” என்றும், “மாநிலங்களின் தேர்தல் தன்மையை மாற்றும் முயற்சி” என்றும், பீகாரில் 65 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்படும் அபாயம் உள்ள நிலையில், தமிழ்நாட்டில் 6.5 லட்சம் பேர் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படுவது “திடுக்கிட வைக்கிறது” என்றும், இது சட்டவிரோதமானது என்றும் கடுமையாக விமர்சித்துள்ளார்.

**தி.க.தலைவர் ஆசிரியர் வீரமணி அவர்கள்,** அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் பேசுகையில், “வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தை தேர்தல் ஆணையம் செய்ய அரசியலமைப்பு சட்டப்படி அதிகாரம் இல்லை. எஸ்.ஐ.ஆரில் ஆபத்தான விஷயங்கள் உள்ளன. இதன்படி பூத் லெவல் அலுவலர்களுக்கு அதிகாரம் அளிக்க சட்ட சம்மதம் கிடையாது. முதல்வர் கூட்டியுள்ள அனைத்துக் கட்சி கூட்டம் இந்தியாவுக்கே வழிகாட்டியாக உள்ளது. உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றத்தில் எஸ்.ஐ.ஆரில் உள்ள அம்சங்கள் குறித்து வழக்குத் தொடர வேண்டும்” என்று கூறுகிறார்.

**விடுதலைச் சிறுத்தைகள் கட்சிச் தலைவர் தொல்.திருமாவளவன்,** “ இது வாக்குரிமையைக் குறிவைத்து நடத்தப்படும் தாக்குதல் அல்ல, குடியுரிமையைக் குறிவைத்து நடத்தப்படும் தாக்குதல். குடியுரிமையை உறுதிப்படுத்துவதற்கான ஆதாரத்தையே அவர்கள் கேட்கிறார்கள். 2002 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலில் உங்கள் பெயர் இருந்தால் அதனைப் பொருத்திப் பார்க்க வேண்டும் என்கிறார்கள். மறைமுகமாக தேர்தல் ஆணையத்தைப் பயன்படுத்தி என்.ஆர்.சி எனும் குடியுரிமைப் பதிவேட்டை உருவாக்கவே இந்த வேலையைச் செய்கிறார்கள்” என்று சொல்கிறார்.

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## நடுவிகந்தான் ஆக்கம்...

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "ஹரியானாவில் வாக்குத் திருட்டு நடந்திருப்பதை வலுவான ஆதாரங்களுடன் சகோதரர் ராகுல் காந்தி நிரூபித்துள்ளார். வாக்குத்திருட்டு குறித்து ஆதாரங்கள் வெளியிட்டபின்பும் தேர்தல் ஆணையம் உரிய விளக்கம் அளிக்கவில்லை" என்று தன் கண்டனத்தை எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

அரியானாவில் முகவரியே இல்லாமல் 93,000 வாக்குகள் சேர்க்கப்பட்டதாகவும், ஒரே தொகுதியில் ஒரேபுகைப்படத்துடன்100வாக்காளர்கள்சேர்க்கப்பட்டு இருப்பதாகவும், நோடல் என்ற தொகுதியில் ஒரு குறிப்பிட்ட வீட்டில் 501 வாக்காளர்கள் இருப்பதாகவும், 1.24 லட்சம் பேர் போலி புகைப்படத்துடன் வாக்குரிமை பெற்றிருப்பதாகவும், ஷாசாகிரி என்பவர் பதாஸ்பூரில் 14 முறை வாக்களித்துள்ளார் என்றும், உத்தரப் பிரதேசத்தவர்கள் அரியானாவில் வந்து வாக்களித்திருக்கிறார்கள் என்றும் அடுக்கடுக்காகத் தேர்தல் ஆணையத்தின் மீது ஆதாரங்களுடன் கடும் குற்றச்சாட்டுகளைக் கூறியிருக்கிறார் ராகுல் காந்தி.

அதுமட்டுமல்லாமல் பிரேசில் நாட்டைச் சேர்ந்த ஒரு 'மாடல்' பெண்ணின் புகைப்படத்தைக் கொண்டு 20 வெவ்வேறு பெயர்களில், 20 வாக்குச்சாவடிகளில் வாக்களிக்கப் பட்டிருப்பதாகவும் அம்பலப் படுத்திருக்கிறார் அவர்.

இதற்கான பதிலைச் சொல்லி ஜனநாயகக் கடமையாற்ற வேண்டிய தேர்தல் ஆணையர் 'அப்படி எல்லாம் ஒன்றும் இல்லை' என்ற மழுப்பலோடு வாயை




மூடிக்கொள்கிறார்.

இப்பொழுது தமிழ்நாட்டிலும் தேர்தல் வாக்காளர் சிறப்புத் திருத்தம் என்ற அதே பெயரில் தேர்தல் ஆணையம் இறங்கியிருக்கிறது. இதிலும் பல குழறுபடிகள் இருப்பதாகச் சொல்கிறார் திமுகழக வழக்கறிஞர் என். ஆர். இளங்கோ.

நேர்மையாக நடக்க வேண்டிய வாக்காளர் சரிபார்ப்புப் பணியைச் 'சிறப்பு திருத்தம்' என்று சொல்லி, பா.ஜ.வுக்குச் சாதமாக நடப்பதற்காக மக்களின் குடியுரிமையைப் பறிப்பது, வன்மையான கண்டனத்திற்கு உரியது.

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

உதவி ஆசிரியர்:
வெற்றிச்செல்வன்

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

## முன்பக்கத் தொடர்ச்சி...

**தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை,** "எஸ்.ஐ.ஆர் பணிக்காக குடியுரிமை சான்றிதழ் கேட்டால் யாராலும் கொடுக்க முடியாது. நவம்பர் 4 முதல் ஒரு மாதத்தில் எஸ்.ஐ.ஆர் பணியை முடிக்கச் சொல்லியுள்ளனர். இது பருவமழை காலம். எப்படி அலுவலர்களால் இதனை செய்யமுடியும். தேர்தல் ஆணையம் செய்வது மோசடியான நடவடிக்கை. தமிழகத்தில் நேரடியாக வெற்றிபெற முடியாது என்பதால், குறுக்கு வழியில் வெற்றிபெற முயற்சி செய்கிறது பா.ஜ.க" என்று சொல்கிறார். இந்நிலையில்...

**கேரள சட்டமன்றம் நிறைவேற்றிய தீர்மானம்:** மதத்தின் அடிப்படையில் குடியுரிமை வழங்கும் குடியுரிமை திருத்தச் சட்டத்தை மீண்டும் கொண்டுவரும் முயற்சிகளுக்கு இந்த வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்த செயல்முறை பயன்படுத்தப்படலாம் என தீர்மானம் கவலை தெரிவிக்கிறது. அடிப்படை உரிமைகளை மீறும் இத்தகைய நடவடிக்கைகளை எதிர்த்து, இந்தியத் தேர்தல் ஆணையம் வெளிப்படையான வாக்காளர் பட்டியல் திருத்தத்தை நடத்த வேண்டும்" என்று இந்தத் தீர்மானம் வலியுறுத்துகிறது.

விரைவில் கேரளாவில் உள்ளாட்சித் தேர்தல்கள் மற்றும் அதைத் தொடர்ந்து சட்டமன்ற தேர்தல்கள் வரவுள்ள நிலையில், சிறப்பு திருத்த செயல்முறையை அவசரமாகச் செய்யத் தேவை" என்றும் அத்தீர்மானம் கூறுகிறது. மோடி - தேர்தல் ஆணைய கைகள் இணையலாம், இன்று. நாளை மக்களின் கைகள் இணையும், உயரும்!

**-எழில்.இளங்கோவன்**

## ஆஸ்திரேலிய

# மனிதநேயர் மாநாட்டில் தலைவர் சுப.வீரபாண்டியன்

ஆஸ்திரேலியா, மெல்பர்ன் நகரில் 2025 நவம்பர் 8 மற்றும் 2 ஆம் நாள்களில் 'நான்காவது பன்னாட்டு மனிதநேயர் மாநாடு' நடைபெற்றது. இம்மாநாட்டில் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின், திராவிடர் கழகத் தலைவர் மானமிகு ஆசிரியர் கி.வீரமணி இருவரும் காணொளி முலமாக உரையாற்றினார்கள். திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர், பேராசிரியர் சுப.வீரபாண்டியன், திமுகழகத் துணைப் பொதுச் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா, திராவிடர் கழகப் பிரச்சார அணிச் செயலாளர், வழக்கறிஞர் அருள்மொழி, 'புதிய சிறகுகள்' அமைப்பின் தலைவர் தோழர் ஓவியா உள்ளிட்டோர் தமிழ்நாட்டின் அழைப்பார்களாகக் கலந்து கொண்டு உரையாற்றினார்கள். மாநாட்டின் சில படங்கள்:









